# மகிழ்ச்சி

MAGIZHCHI
MAGAZINE

SEPTEMBER
2024



## அடையாளங்களாக்கும்
# ஆண்டவர்


C.S.I. TAMIL CHURCH SHARJAH
The United Arab Emirates,
Mob : 0507032150 / website : www.csitamilsharjah.com


For Private Circulation Only

# இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆயர் மடல் | 3 |
| செயலர் மடல் | 5 |
| திருமறை தியானம் | 7 |
| பெண்கள் பகுதி | 9 |
| அறிந்து கொள்வோம் | 11 |
| Wisdom of the elderly | 12 |
| இனிய இல்லறம் | 14 |
| Church History | 17 |
| திருமறையை தெரிந்துகொள்வோம் | 20 |
| Kids Corner | 21 |
| Birthday & Wedding Anniversary Celebrants | 23 |
| Daily Bible Reading | 25 |
| ஆராதனை தியானப் பொருள் | 26 |



மகிழ்ச்சி
செப்டம்பர் - 2024



# From the Presbyters Desk

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே,

மீட்பரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பிதாவாகிய கடவுளாலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

கடந்த நாட்கள் முழுவதும் கோழி தன் குஞ்சுகளை செட்டைகளின் நிழலிலே வைத்து பாதுகாத்து பராமரித்து வழிநடத்துவது போல நம்மை வழி நடத்தி வந்த கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன். கடவுளுடைய பெரிதான கிருபையினால் விடுமுறை நாட்களை மகிழ்ச்சியோடும், குடும்பத்தோடும், நண்பர்களோடும், உறவினர்களோடும், செலவழிக்க கடவுள் கிருபை செய்தார், தொடர்ந்து வருகின்ற sep 7-ம் தேதி உங்களோடு இணை இருக்கின்றேன், பயணங்களுக்காக ஜெபித்துக் கொள்ளும் படியாக உங்களை கேட்டுக்கொள்கிறேன். நான் விடுமுறைக்குச் சென்ற பொழுது ஆராதனை காரியங்களையும் ஊழியங்களை பொறுப்பெடுத்து செய்த Mr.Robert pon singh அவர்கள், Rev.Gemson அவர்கள், Rev.Samuel அவர்கள் மற்றும் சபை பொறுப்பாளர்கள், தன்னார்வ தொண்டர்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி செலுத்துகிறேன். விடுமுறை நாட்களில் நம்மில் அநேகர் தாயகம் சென்று நம்முடைய குடும்ப உறவுகளோடு சந்தோஷமாய் நம் நேரங்களில் செலவழிக்கவும், திரும்பவும் நம் பணிகளில் இணைய கிருபை செய்ததற்காக ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். கோடை விடுமுறை முடிந்து கல்விக்கூடங்களுக்கு செல்லும் பிள்ளைகளை வாழ்த்துகிறேன்.

கடந்த ஆண்டு நமது junior church இயக்குனராக பணியற்றிய Mrs. Catherin Murali மற்றும் ஆசிரியர்களாக சிறப்பாக ஊழியம்

செய்த அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். இந்த ஆண்டு junior church இயக்குனராக Mrs.Adeline Solomon அவர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள், அவர்களது ஊழியம் சிறக்க வாழ்த்துகின்றேன் ஜெபிக்கின்றேன்.

கர்த்தருக்கு சித்தமானால் வருகின்ற நவம்பர் மாதம் 17-ஆம் தேதி அறுப்புக்கால தோத்திரப் பண்டிகை நடத்த இருக்கின்றோம். இந்த ஆண்டு கன்வீனராக Mr.Mohandas அவர்கள் மற்றும் Mr.Paul Denizer அவர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். நமது முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் கொடுத்து இவ்வாண்டு அறுப்பு கால ஸ்தோத்திரப் பண்டிகையை சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து ஸ்தோத்திரப் பண்டிகைக்காக ஜெபித்துக் கொள்ளும் படியாக கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த நாட்களில் அறிவித்தபடி செப்டம்பர் 1-ம் தேதி முதல் நம்முடைய மாலை ஞாயிறு வழிபாடு 6.30 மணி முதல் 8.30 மணி வரை St.Paul's Sanctuary வைத்து நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் இதர ஊழியங்களின் ஆராதனை ஒழுங்குகள் மகிழ்ச்சி புத்தகத்தின் பின்புறத்திலே உங்களுக்கு அச்சிடப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து அனைவரும் குடும்பமாக ஆலய ஆராதனையில் பங்கு பெற்று விசுவாச வாழ்விலும் ஜெப வாழ்விலும் வளர்ச்சி அடைய கேட்டுக் கொள்கிறேன். இறை ஆசி என்றும் நம்முடன் இருப்பதாக. ஆமென்.

இறைபணியில்
அருள்திரு. **J.ஜான் ஜெபலின் ஜோஸ்**

☎ **+971 50 703 2150**
**e-mail : tamilchurchcsisharjah@gmail.com**





# செயலர் மடல்

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே, திருச்சபையின் அங்கங்களாகிய உங்களனைவருக்கும் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கர்த்தரைத் துதித்து, அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபமாக்குங்கள் ; அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரசித்தப்படுத்துங்கள் (சங்கீதம் 105:1). இந்த எட்டாம் மாதத்திலும் எல்லா நிலைகளிலும் தமது செட்டைகளின் மறைவில் நம்மை மறைத்து பாதுகாத்த நமது ஆண்டவரின் அற்புதமான நாமத்தை மகிமைப்படுத்துவோம். இந்த விடுமுறை நாட்களிலே தாயகம் சென்று திரும்பி வந்துள்ள நமது திருச்சபையின் குடும்பங்களை பாதுகாத்து சுகமான பிரயாணத்தை அனுக்கிரகம் செய்த தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம்.

விடுமுறைக்காக நமது ஆயரின் குடும்பம் தாயகம் சென்று இருக்கின்ற இந்த நாட்களிலே நமது திருச்சபையின் ஆராதனைகளை பொறுப்பெடுத்து நடத்தி வருகின்ற திரு. ராபர்ட் பொன் சிங் அவர்களுக்கு திருச்சபையின் சார்பிலும் நிர்வாக குழுவின் சார்பிலும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். கடந்த மாதம் மூன்றாவது வாரம் அன்று திருவிருந்து ஆராதனையை நடத்தி தேவ செய்தியை நம்மோடு பகிர்ந்து கொண்ட ஆயர் Rev. Jemson, (CSI Tamil Parish, Ras Al Khaima) அய்யா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை நிர்வாக குழுவின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த வருடத்தில் சிறுவர் ஊழியத்தை (Junior Church) பொறுப்பெடுத்து நடத்திய தந்த அன்பு சகோதரி, Mrs. Catherine Murali அவர்களுக்கு

திருச்சபையின் சார்பிலும் நிர்வாக குழுவின் சார்பிலும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த வருட சிறுவர் ஊழியத்தை (Junior Church) பொறுப்பெடுத்து நடத்துவதற்கு முழு மனதோடு ஒப்புக் கொண்ட Mrs. Adeline Solomon அவர்களுக்கு நிர்வாக குழுவின் சார்பில் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருச்சபையில் அறிவித்தபடி செப்டம்பர் 1ம் தேதி முதல் நமது திருச்சபையின் ஆராதனைகள் புதிய கட்டிட அறையில் (St. Paul's Sanctuary ) வைத்து நடபெறுகின்றது, ஆராதனை நேரங்களில் எவ்வித மாற்றமும் இல்லை. இதை குறித்த விவரங்கள் பின் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் நடைபெற உள்ள அறுப்பின் தோத்திரப் பண்டிகைக்கு பல்வேறு நிலைகளில் ஆயத்தங்கள் நடைபெற்று வருகின்றது. அந்த நாளின் ஆராதனைக்காகவும், பிற நிகழ்வுகளுக்காகவும் அதன் பொறுப்பாளர்களாக செயல்பட உள்ள திரு மோகன் தாஸ் மற்றும் திரு பால் டெனிசர் சேகர் அவர்களுக்காகவும் திருச்சபையார் ஜெபிக்கவும் எல்லா நிலைகளிலும் உங்கள் உதவிகளை நல்கவும் வேண்டிக்கொள்கிறோம்.

கர்த்தர் தாமே நம் அனைவரையும் தாயகத்தில் உள்ள நமது குடும்பத்தினர் அனைவரையும் பாதுகாத்து பராமரித்து வழிநடத்துவராக ஆமென்.

திருச்சபை ஊழியத்தில்
**ஸ்டீபன் குணசேகர்**
☎ +971 58 5896 975





# அடையாளங்களாக்கும் ஆண்டவர்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய இன்ப நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்கிறேன்.

இதோ, நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்.( ஏசாயா 8:18)

தென் நாடாகிய யூதா வலிமைமிக்க அண்டை நாடான ஆசிரியாவின் அச்சுறுத்தலில் இருந்த காலம். அப்போது யூதாவின் அழிவுக்கு காரணமாக இருந்த ஒன்று அவர்கள் கடவுள் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்து போனதே. மட்டுமல்லாமல் அவர்கள் இறைவனுக்கு விரோதமாக செய்த பாவங்கள் தான் என்பதை உணர்ந்த ஏசாயா அவர்களை நீதியோடும், நேர்மையோடும் வாழும் படியாக அழைக்கிறார். நீங்கள் கடவுளின் வார்த்தைக்கு செவிகொடாமல் போனால் இருளும், அழிவுமே உங்களுக்கு காத்திருக்கிறது என்று எச்சரிக்கிறார். இவைகளிலிருந்து ஒரு மாற்றம் பெற கடவுள் தருகின்ற அடையாளம்.

### 1.இறைவன் நம்மில் குடிக்கொண்டிருக்கிறார்: (ஏசா 8:18)

“சீயோன் பர்வதத்தில் வாசமாய் இருக்கிற சேனைகளின் கர்த்தராலே”

கடவுள் தம் மக்களினங்களை நேசிக்கின்றவர் என்பதை நாம் நன்கு உணர்வோம். அவர் எந்த நிலையிலும் நம்மில் குடி கொண்டிருக்கிறார். இறைவாக்கினர் மூலம் மக்கள் எச்சரிக்கப்பட்டும், அவர்கள் கடவுளின் அன்பை பெற்றுக் கொள்வதில் அவருக்கு ஒரு அடையாளமாக மாறுவதில் உறுதி இழந்த மக்களாய் இருந்தார்கள்.

இந்த நிலையில் நான் சீயோன் மலையில் குடி கொண்டிருக்கிறேன் என்று கூறி நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார். இவர்களுடைய மாயவித்தையான அனுபவங்களையும், குறி கேட்கின்ற அனுபவங்களையும், கடினமான எச்சரிப்பையும் அவர்கள் கேட்கின்றார்கள். இப்படியே நீங்கள் செய்தால் காரிருள் உங்களை மூடும் என்று எச்சரிக்கிறார். ஆனாலும் துயருற்றிருந்த நாட்டினருக்கு மனச்சோர்வு தோன்றாதிருக்க அவர் சொன்ன வார்த்தை நம்மில் அவர் கூடிக் கொண்டிருக்கிறார் என்பதாகும். படைகளின் ஆண்டவர் நம்மில் குடிகொள்ளும் போது நிறைவான மேலான நன்மைகளை நாம் அவரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். அந்த நம்பிக்கையில் நாம் முன்னேறி செல்வோம்.

**2. நம்மை அடையாளப்படுத்துகிறார்: (ஏசா 8:18)**

“இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்”

நாம் அவருடைய பிள்ளைகள் அவர் நம்மை நேசிக்கிறார். எனவே ஆண்டவர் நம்மை அவருக்கு ஒரு அடையாளமாகவே பார்க்கிறார். ஏசாயா 7:14ல் ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். இயேசு கிறிஸ்துவின் பிறப்பே அடையாளப்படுத்தப்பட்ட ஒன்றாக அமைகிறது.

ஏசாயா 11:68ல் நாம் படிக்கும் போது இறைவன் இங்கு ஒரு அடையாளத்தை இறைவாக்கினர் வழியாக காட்டுகிறார். பசுவும், கரடியும் ஒன்றாய் மேயும், சேர்ந்து படுத்துக் கொள்ளும், சிங்கம் மாட்டைப் போல் வைக்கோல் தின்னும், பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பின் வளையில் விளையாடும், பால்மறந்த பிள்ளை கட்டுவிரியன் வளையுனுள் தன் கையை விடும். இவைகளால் ஒரு அடையாளம் காண முடியும். ஏசாயா 42:3ல் நீதியை நிலை நாட்டுமாறு உம்மை அழைத்தேன். உன் கையைப் பற்றி பிடித்து உம்மை பாதுகாப்பேன். மக்களுக்கு உடன்படிக்கையாகவும் பிற இனத்தாருக்கு வழியாகவும் நீர் இருக்குமாறு செய்வேன் என்று ஒரு அடையாளத்தை தருகின்றார்.

இறைவன் நமக்கு தந்த புதிய மாதத்திலே நாம் நம்மை அவர் கையில் ஒப்படைத்து, அவர் நம்மில் குடி கொண்டிருக்கிறார், அடையாளப்படுத்துகிறார் என்ற நம்பிக்கையோடு நமது பயணத்தை தொடர்வோம். இறை ஆசிகளை நாம் நமக்கு சொந்தமாக்கிக் கொள்வோம்.

இறைப்பணியில்
உங்கள் ஆயர்.

# நம்மை உருவாக்கின கடவுள்



இவ்வுலகத்தை படைத்த கடவுள் அதை காத்தும் பயன்படுத்தியும் ஆசீர்வதித்தும் வழிநடத்தி வருகிறார். சங்கீதம் 139 இல் பார்க்கின்றபோது மனிதனை உருவாக்கும் விதத்தை மிகவும் அழகாக எழுதி இருக்கிறதை நாம் பார்க்க முடியும். நான் ஒளிபிடத்திலே உண்டாக்கப்பட்டு பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர வினோதமாய் உருவாக்கப்பட்ட போது என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை என் கருவை உன் கண்கள் கண்டது என்று தன்னை உருவாக்கின கடவுளை போற்றி பாடுகிறதை சங்கீதம் 139ல் பார்க்கிறோம். நம் தாயின் கர்ப்பத்தில் தோன்றும் முன்னே கடவுள் நம்முடைய அனைத்து காரியங்களையும் அறிந்தும் மற்றும் உருவாக்கியும் இருக்கிறார். ஆகவே நாமும் ஆண்டவராகிய தேவன் நம்மை தன்னுடைய சாயலாக தமது ஜீவ சுவாசத்தை தந்து தாயின் கர்ப்பத்தில் உருவாக்கி இம்மட்டும் நம்மை வழி நடத்திக் கொண்டிருக்கிற கடவுளை நாம் போற்றுவோம்.


தாயின் கர்ப்பத்தில் நம்மை உருவாக்கின கடவுள் நம்மை அப்படியே விட்டுவிடுகிறவர் அல்ல. உருவாக்கி கருத்தாய் வழி நடத்துகிறவர் நம் வாழ்வில் ஒவ்வொரு நிலையிலும் அவர் கருத்தாய் இருந்து நம்மை உருவாக்குகின்றார்.

யாத்திராகமம் 1,2 அதிகாரங்களில் பார்க்கின்றபோது மீட்பின் பணிக்காக மோசையை தனக்கு உகந்த பாத்திரமாக உருவாக்குகினார். அதேபோல் நம்மையும் கருத்தாய் அவரின் திருப்பணிக்காக உருவாக்கி வழிநடத்துகின்றார்.

தாயின் வயிற்றில் நம்மை அறிந்த கடவுள் பிறக்கின்ற போது ஆசீர்வாதங்களை பரிசாக அவரின் சாயலாக உருவாக்கி பூமிக்கு அவரின் திருப்பணியினை நிறைவேற்ற அனுப்புகிறார். அவ்வாறு திருப்பணியினை உண்மையாக நிறைவேற்றுகிற போது கடவுள் நம்மை கனப்படுத்தி உருவாக்கி மற்றும் நம்மை உயர்த்துகிறார். எஸ்தர் 2:5 ல் பார்க்கின்றபோது அடிமையான மொர்தெகாய் உயர்த்தப்படுகின்றதை எஸ்தர் 6 ல் பார்க்கின்றோம் பலவீனர்களை தேர்ந்தெடுத்து கணம் பண்ணுகிற கடவுளாக வீற்றிருக்கிறார் நாமும் தாழ்ந்த நிலையிலே இருக்கின்றோம் என்று நினைத்தால் நம்மை கணப்படுத்தி உயர்த்தும் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையோடு முன்னேறி செல்வோம். கடவுள் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

**J.ஜெனு ஜெபலின்**
ஆயர் அம்மா





# மிஷனெரி JOHN HUNT

பசுபிக் மகா சமுத்திரத்தில் கீழ் பகுதியிலுள்ள சிறு சிறு தீவுகள் பிஜி தீவுகள். ஒவ்வொரு தீவையும் குறு நில மன்னர்கள் ஆண்டு வந்ததால் ஒருவருக்கொருவர் சண்டையிடுவதிலும் மக்களை கொன்று குவிப்பதிலே அதிக அக்கரை காட்டி வந்தனர். கணவன் இறந்தவுடன் மனைவியை உயிரோடு கணவனோடு சேர்த்து புதைத்து விடுவார்கள். இப்படிப்பட்ட மக்களின் மத்தியிலே ஆண்டவருடைய ஊழியத்தைச் செய்ய 1812 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்த ஜான் ஹண்ட் தன்னை மிஷனரியாக ஒப்புக் கொடுத்தார். ஆறு வாரத்திலேயே அம்மக்களுடைய மொழியினை கற்றுக் கொண்டார். வேதாகமத்தின் அற்புதங்களையும், கதைகளையும், பிஜி மொழியில் எழுதி அவர்களுக்கு போதித்தார். இதனால் விசுவாசிகளின் எண்ணிக்கைப் பெருகியது. ஜான் ஹண்ட் உடல் பலவீனப்பட்டாலும் பிஜி தீவை விட்டு போகவில்லை. 36 வயது நிரம்பிய ஜான் ஹண்ட் 9.10.1848 அன்று மரித்தார். அதன்பின்பு அவரது உடல் இங்கிலாந்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இன்று பிஜி தீவுகளில் 90 சதவீதத்தினர் கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள்.



# Wisdom of the elderly

Have you known people who still produce fruit, even in old age? What characterizes their lives? How have they inspired you?

Wisdom belongs to the aged, and understanding to the old," says Job 12:12: They will still bear fruit in old age, they will stay fresh and green.

Each of us cherish and enjoy the love and care of our grandparents. They are the role models in our lives who have taught us self-less love towards our children and overall towards life. Older members of a family bring wisdom, calm, dependability and unconditional love that frame the views of the broader family and shape the future of younger generations. In general, they are a form of blessing for all of us. They are the greatest treasure of the family, society, and nation. They have an immense ocean of knowledge, experience, and wisdom which serves as a guidepost for the younger generation.

Have you ever thought why the elderly are blessed? Psalms 92:12

explains the fact why elderly are blessed. The righteous shall flourish like a palm tree, He shall grow like a cedar in Lebanon. 13 Those who are planted in the house of the Lord Shall flourish in the courts of our God. What accounts for this unusual display of flourishing? Surely, it is, in part, a result of living a godly or righteous life. Those who walk in God's ways live more meaningful and effective lives. But Psalm 92 adds another reason for the long-lived fruitfulness of these people: "For they are transplanted to the LORD's own house. They flourish in the courts of our God." In other words, they have been planted so that their roots grow deeply into God.

A productive old age is a result of that close relationship with God. They do the right thing and are examples for us to grow deeper in our relationship with God and lead a righteous life. It is not easy to lead a righteous life. The first step would be to learn from our own grandparents and take an effort to develop and improve our relationship with God.

The glory of young men is their strength. The splendor of old men is their gray hair. (Proverbs 20:29).Thus, living productively, even into old age, isn't just a matter of doing the right thing, however important this may be. It is, above all, a result of living in a deep, growing relationship with God.

Aging in the Bible is said to be a sign of experience. The Lord promises His continued love and concern for the elderly. "I will be your God throughout your lifetime -- until your hair is white with age. I made you, and I will care for you. I will carry you along and save you (Isaiah 46:4).

contribution by
Nancy Agustin



# பெற்றோரின் பொறுப்பு

**பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது.**

(கொலோசெயர் 3:14, 15).

**கோபத்தைக் கையாளும் வழிகள்**

குடும்ப உறவிலும் (மனைவி, பிள்ளைகள், உறவினர்). ஏனைய புற உறவிலும் (நண்பர்கள், உடன் ஊழியர்கள், அண்டை அயலார் ) தீமை பயக்கும் கோப உணர்ச்சிகளையைக் கையாளும் பன்னிரெண்டு படிகள் யாவையெனக் காண்போம்.

**1. நீங்கள் உணர்ச்சி வயப்படுகையில், அவற்றினை எவ்வாறு எதிர் கொள்கிறீர்கள் என்பதில் கவனமாயிருங்கள் (Beware of your Emotional Reaction).**

கோப உணர்ச்சி தலைதூக்கி நிற்கும்போது, மூளையில் சிந்திக்கும் செயல் தடைப்படுகிறது. உணர்ச்சிவசத்தில் உங்களுடைய சிந்தனை ஓட்டம் தடைப்பட எப்போதும் அனுமதிக்காதீர்கள்.

“நான் எப்படிப்பட்ட உணர்ச்சியால் ஆட்கொள்ளப் பட்டுள்ளேன்?” (What am I feeling?) என உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். இக்கேள்வி உங்களைச் சிந்திக்கத் தூண்டும். சிந்தித்து எடுக்கும் முடிவில் தெளிவு இருக்கும்.

**2. உங்கள் உள்ளத்திலிருக்கும் கோப உணர்ச்சியை உணருங்கள்** (Recognise your anger).

உங்களிலுள்ள கோப உணர்ச்சியை ஒத்துக்கொள்ளுங்கள் (Admit your feelings). உங்கள் மனதில் உள்ள கோபத்தை ஒத்துக் கொள்வதால், நீங்கள் கோபப்படத்தான் வேண்டுமென்ற கட்டாயமில்லை.(Admitting the feeling of anger does not mean that you should act it out). ஒத்துக்கொள்ளச் செய்வது உங்களிலுள்ள உணர்ச்சியைப் புரிந்து கொள்வதற்காகவே.

**3. உங்களில் "கோப உணர்வு ஏன் எழுந்தது" என அறிய முயலுங்கள்.** (Findout the reasons for the anger).

பெரும்பாலும் நம்மிலெழும் கோபங்கள் நமது சுயநலத்தினால் ஆனவையே. நீங்கள் எதிர்பார்ப்பது போல் மற்றவர்கள் நடக்க வேண்டுமென்று விரும்புகிறீர்கள். அவர்கள் அப்படி நடக்காவிட்டால் கோபமடைகிறீர்கள்.

நீங்கள் நினைப்பதுபோல் எல்லோரும், எப்போதும் நடக்க வேண்டுமென எதிர்பார்த்தால் ஏமாற்றமடைவீர்கள். உங்களாலும் மற்றவர்கள் நினைப்பதுபோல் எப்போதும் நடக்க இயலாது. நாமடையும் ஏமாற்றங்களே, நமது கோபங்களுக்குக் காரணமாக இருக்கிறது. (We are often angry, because we are frustrated).

எப்போதெல்லாம் ஏமாற்றமடைகிறோம்?

ஆசைகள் (desires) நிராசைகளாக மாறும்போது,
வெற்றிகள் (success) கிட்டாதபோது,
தேவைகள் (wants) பூர்த்தியுறாதபோது,
குறிக்கோள்கள் (ambitions) நிறைவேறாதபோது,
நம்பிக்கைகள் (hopes) தளரும்போது,
ஊக்கம் (drives) குன்றும்போது,
உறுதி (will) குலையும்போது,
முன்னேற்றங்கள் (advancement) தடைப்படும்போது
ஏமாற்ற மடைகிறோம்; அதனால் கோபமடைகிறோம்.
எனவே "இறைவனின் சித்தம்" நிறைவேறவே எப்போதும் விரும்புங்கள்.

**4. கோபத்தின் காரணத்தைக் கண்டுபிடியுங்கள்** (Identify the root of

உங்கள் கோபம் மேற் கூறிய காரணங்களினாலோ அல்லது வேறொன்றினாலோ இருக்கல இருக்கலாம். அப்படிப்பட்ட நேரங்களில் உங்களை நீங்களே சில கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுங்கள். அதாவது உங்களுடைய உணர்ச்சி வெள்ளத்தினால் சிந்திக்கத் தடைப்பட்டிருந்த மூளையைச் மறுபடியும் இயக்க இக்கேள்விகள் பயன்படும்.

"என் கோபம் ஏமாற்றத்தினால் உண்டானதா?"

"ஏமாற்றமென்றால், அது எப்படிப்பட்ட ஏமாற்றம்?"

"என் ஏமாற்றத்திற்கு எது, அல்லது யார் காரணம்?"

இக்கேள்விகள் உங்களைப் பெரும்பாலும் கோபத்தின் உச்சியிலிருந்து சமநிலைக்குக் கொண்டுவரும்.

**5. கோபமுறச்செய்யும் சந்தர்ப்பசூழலைத் தவிர்க்க முயலுங்கள்** (Try to avoid the situations causing you to get angry)

கூடுமானவரை நீங்கள் கோபங்கொள்ளாச் சூழலை உருவாக்க முயலுங்கள்.

"நான் கோபமுறும்படி மற்றவர்கள் நடப்பதற்கு நான் எவ்வகையிலாவது காரணமாயிருக்கிறேனா?" என உங்களை நீங்களே வினாவித் தெளிவுறுங்கள். பதில் "ஆம்" எனின் அச்சூழல் உருவாவதை முடிந்தவரை தவிருங்கள்

**6. கோபமுறாதிருக்க வழிகளைக் காண முயலுங்கள்** (Ways not to get angry)

உங்கள் உள்ளில் கோபம் பற்றி எரியினும், கோபத்தைக் காட்டுவது தான் உங்கள் முன்னுள்ள பிரச்சனக்குத் தீர்வா? என நிதானியுங்கள்.

உங்கள் கோபத் கோபத்தினால் உருவாகக் கூடிய பின் விளைவுகளைப் (consequences) பட்டியலிடுங்கள்.

உங்கள் முன்னுள்ள பிரச்சனைக்குச் சிறந்த பிரதிச் செயல் (best response) கோபம் மட்டுந்தானா?

ஏன் அதனை இரக்கத்தாலும், புரிந்துகொள்ளுதலாலும், அன்பாலும் எதிர்கொண்டு, கோபத்தை தவிர்க்க கூடாது? (Find ways to avoid anger)

**7. முன்கோபம் தீர்வல்ல** (Short-temper is not an answer)

நீங்கள் முன்கோபக்காரரா? முன்யோசனையின்றி திடீர் உணர்ச்சிக்கு (impulse) ஆட்கொள்ளப்படுபவரா?

அப்படியானால் உங்களுக்குக் கோபம் வரும்பொழுது ஆழமாக சுவாசத்தை உள்ளிழுத்து, பத்து வரை எண்ணுங்கள்.

தாமஸ் ஜெபர்சன், "நீங்கள் கோபமாக இருந்தால், உங்கள் வாயைத் திறப்பதற்கு முன்னால் பத்து எண்ணுங்கள்; நீங்கள் மிகவும் கோபமாக இருந்தால் நூறு எண்ணுங்கள்" என்று கூறுகிறார் (When angry, count ten before you speak; if (you are) very angry, (count) an hundred. Thomas Jefferson).

இந்தப் பயிற்சி எளிதாகவும் அதே சமயத்தில் வேடிக்கையாகவும் தோன்றலாம்; ஆனால் இந்தப் பயிற்சி பலரால் பயன்படுத்தப்பட்டு, சிறந்தது என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகும் (it is a proven technique).

சினமுள்ள வார்த்தையை உச்சரிப்பது சிரமமல்ல, ஆனால் அதனால் ஏற்படும் கண்ணீரும், வேதனையும் அளவிற்கடங்காததாக இருக்கும்.

ஆகையால், உங்கள் கோபத்திற்குக் காரணமான நபரிலுள்ள குறைகளைக் காண்பதை விடுத்து, அவர்களிலுள்ள நிறைகளிலே உங்கள் கவனத்தைத் திருப்புங்கள்.

# கிறிஸ்தவ அறிவு அபிவிருத்திச் சங்கம் (S.P.C.K.)



புனித ஜார்ஜ் கோட்டைக்கு வடக்கே இருந்த பகுதி "கரும்பட்டிணம்" என்றழைக்கப்பட்டு வந்தது. இந்நகரைச் சுற்றி மதில்சுவர் கட்டப்பட்டிருந்தது. அம் மண்சுவரில் நான்கு வாயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. சுல்ட்ஸ் சென்னையைச் சென்றடைந்து நான்கு நாட்கள்தான் ஆயின. தாம் தொடங்க இருக்கின்ற பள்ளியைப் பற்றிய விளம்பரத்தை இவ்வாயில்களில் ஒட்டிவைத்தார். பன்னிரெண்டு மாணவர்கள் அப்பள்ளியில் சேர்ந்தனர். அப்பொழுது தெலுங்கு மொழியும் சென்னையில் வழக்கிலிருந்தது. எனவே தெலுங்கு மொழியில் பாடங்கள் நடத்த பிராமண ஆசிரியர் ஒருவரை நியமித்தார்.

இப்பள்ளியை நடத்த ஆளுநர் மானியம் கொடுத்தார். சுல்ட்ஸ்க்கு யார் சம்பளம் கொடுப்பது என்ற பிரச்சினை ஏற்பட்டது. டேனிஷ் குடியேற்றங்களில் பணிசெய்த மிஷனெரிமாருக்குச் சம்பளம் கொடுக்க டென்மார்க் அரசர் முன் வந்தார். அவர்கள் வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டால் அவர்களுடைய மாதச் சம்பளத்திற்குத் தாம் பொறுப்பேற்க முடியாதென்று அரசர் தெளிவாய்க் கூறியிருந்தார். ஆங்கிலேயரின் வாணிப மையமான சென்னையில் சுல்ட்ஸ் பணி செய்ய முற்பட்டார் அல்லவா? என்ன செய்வது என்ற திகைப்பு! ஆயினும் கடவுளின் பெரிதான கிருபையால் இவருக்கு ஊதியம் அளிக்க S.P.C.K. முன் வந்தது.

குறிப்பு : நெடுங்காலமாக (நான்கு சாதியிலும் சேராத) தாழ்த்தப்பட்டவர், ஆதி திராவிடர், பறையர் என்று சொல்லப்படும் மக்களைக் குறிப்பிட பஞ்சமர் என்னும் சொல் பயன்படுத்தப்படுகின்றது. இவர்களை அரிஜனங்கள் என்று மகாத்மா காந்தி குறிப்பிட்டார். இந்நாளில் இவர்கள் ஒடுக்கப்பட்டவர்கள் என்ற பொருள்தரும் தலித் சொல்லால் குறிப்பிடப்படுகின்றனர்.

## S.P.C.K.

S.P.C.K. சங்கமானது 1698-ல் ஆங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த சிலரால் இங்கிலாந்தில் தோற்றுவிக்கப்பட்டது. இங்கிலாந்தின் ஆளுகைக்குட்பட்ட குடியேற்றங்களில் கிறிஸ்தவ சமய அறிவையும், கல்வியையும் வளர்ப்பதும், தாய் நாட்டில் கிறிஸ்தவ அறிவு வளரச் செய்வதும் இச்சங்கத்தின் எனவே, இச்சங்கம் கல்விப் பணியிலும்

வெளியீட்டுப் பணியிலும் தனது முழுக் கவனத்தையும் செலுத்தியது. 1710 ல் அச்சகம் தேவை என்ற சீகன்பால்கின் வேண்டுகோள் இங்கிலாந்தில் வெளியாயிற்று என்று முன்பு படித்தோம் அல்லவா? அந்த ஆண்டு முதற்கொண்டே தரங்கம்பாடியில் செயல்பட்டு வந்த டேனிஷ் மிஷனுக்கு ஷி.றி.சி.ரி. உதவி செய்து வந்தது. தரங்கம்பாடிக்கு அச்சு இயந்திரம், நூல்கள், திருமறை ஆகியனவற்றை வாங்கி அனுப்ப நிதி திரட்டியது. “மலபார் குழு” என்னும் ஒரு குழு அமைக்கப்பட்டது. (தென்னிந்தியாவில் தமிழ் பேசப்பட்ட பகுதிகளை “மலபார்” என்று அந்நாட்களில் குறிப்பிடுவது ஐரோப்பியரின் வழக்கம்.) சிறிது காலத்திற்குப் பிறகு இக்குழு “கிழக்கிந்திய மிஷன்” என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

தங்களுடைய மிஷனெரிமாரை ஆதரிப்பதோடு மற்றவர்களுக்கும் உதவி செய்ய இச்சங்கம் தீர்மானம் செய்தது. எனவே 1728ல் சுல்ட்ஸ் என்ற ஜெர்மானிய லூத்தரன் மிஷனெரியைத் தங்களின் முதலாவது மிஷனெரியாக ஏற்றுக்கொண்டது. இவருடன் இணைந்து ஊழியம் செய்ய மேலும் இரண்டு ஜெர்மானிய லூத்தரன் மிஷனெரிமாரும் அமர்த்தப்பட்டனர். ஆங்கிலேய மிஷனெரி எவரும் அமர்த்தப்படவில்லை என்றபோதிலும், சென்னையில் இச்சங்கம் “ஆங்கிலேயே மிஷன்” என்று அழைக்கப்பட்டது.

## சென்னையில் பணி

சென்னையில் வீடு ஒன்றை சுல்ட்ஸ் வாங்கினார். இவ்வீடு எவ்விடத்தில் இருந்தது என்று தெரியவில்லை. கரும்பட்டிணம் என்றழைக்கப்பட்ட (தற்போதைய ஜார்ஜ் டவுண்) பகுதியில் கடற்கரையோரமாக இருந்திருக்கக்கூடும் என்று நினைக்க இடமுண்டு. அவ்வீட்டில் வழிபாடுகள் நடத்தப்பட்டன. வீட்டு வாசலில் அமர்ந்தவாறு காலைதோறும் 9 மணி முதல் 10 மணி வரை திருமறைப் பகுதிகளை உரத்த சத்தமாய் சுல்ட்ஸ் படிப்பார். பின்னர் அப்பகுதிகளை விளக்கிடுவார்; இவர் சொல்வதைக் கேட்கவும், இவருடன் உரையாடவும் அநேகர் வருவது வழக்கம்.

மாணவர்களுடன் சேர்ந்து சுல்ட்சும் தெலுங்கு மொழியைக் கற்றார். பிற்பாடு இந்தியையும் கற்றுக்கொண்டார். திருமறையைத் தெலுங்கில் முழுவதுமாக மொழியாக்கம் செய்தார். சில திருமறைப்பகுதியை இந்தியில் மொழிபெயர்த்தார். சென்னையிலும் சுற்றியுள்ள கிராமங்களிலும் நற்செய்திப் பணி செய்தார். இவரது ஊழியத்தின் பயனாய் ஏறக்குறைய 700 பேர் திருமுழுக்குப் பெற்றனர்.

சுல்ட்ஸ், தம்முடன் பணியாற்றிய உடன் ஊழியர்களான இரண்டு

ஜெர்மானிய மிஷனெரிமாருடன் இசைந்து செல்ல முடியவில்லை. எனவே சில ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் இருவரும் சென்னையை விட்டுக் கடலூரில் உள்ள புனித டேவிட் கோட்டையில் பணி செய்யச் சென்றனர். 1743ஆம் ஆண்டு வரை சென்னையில் தங்கி ஊழியம் செய்தார். சுகவீனம் காரணமாக அவ்வாண்டில் ஜெர்மனிக்குத் திரும்பிச் சென்றார். ஹல்லே பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணி செய்த காலத்தில் அநேக மிஷனெரிமாரைப் பயிற்றுவித்தார். அடுத்த அத்தியாயத்தில் வாசிக்கப்போகும் சிதி. சுவார்ட்ஸ் (Schwartz) என்னும் புகழ்மிக்க பெருந்தகையாளர் இவருடைய மாணவராகவும் ஒருவேளை இருந்திருக்கக்கூடும்.

### பெப்ரீசியஸ் S.P.C.K. ல் சேர்ந்தார்

சுல்ட்ஸ் சென்னையை விட்டுச் செல்வதற்கு ஓராண்டு இருக்கும் வேளையில் இவருடன் சேர்ந்து பணியாற்ற அருள்திரு. யி.றி. பெப்ரீசியஸ்

(Fabricius) சென்னைக்கு வந்தார். இவர் ஒரு கற்றறிந்த மேதை. சென்னையில் 50 ஆண்டுகள் தங்கிப் பணி செய்தார். தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியத்திற்கு இவர் செய்த சேவை போற்றுதற்குரியது. திருமறையைத் தமிழில் மொழியாக்கம் செய்தார். இவருடைய மொழிபெயர்ப்பை அனைவரும் விரும்பி வரவேற்றனர். ஒரு நூற்றாண்டுக் காலமாக இந்த மொழிப்பெயர்ப்பையே பயன்படுத்தினர். அதன் பிறகே இவருடைய மொழிபெயர்ப்புத் திருத்தப்பட்டது. பாமாலைகள் பலவற்றைத் தமிழாக்கம் செய்தார். முதன் முறையாக "ஆங்கிலம்தமிழ்", "தமிழ்ஆங்கிலம்" அகராதிகளை உருவாக்கினார்; தமிழ் இலக்கண நூல் ஒன்றையும் எழுதினார்.

## ஒரு கிறிஸ்தவனின் மாபெரும் மகிழ்ச்சி, கிறிஸ்துவை மகிழ்விப்பதே!

-சார்ல்ஸ் ஸ்பர்ஜன்



# திருமறையை தெரிந்துகொள்வோம்

சங்கீதம் 31 - 40

1. யாரை வெறுத்து, யாரை நம்பியிருக்கிறேன் என்று தாவீது கூறுகிறார்?
2. எதனால் பெலன் குறைந்து, என் எலும்புகள் உலர்ந்து போயிற்று?
3. யாரை கிருபை சூழ்ந்து கொள்ளும்?
4. கர்த்தர் எதில் பிரியப்படுகிறார், பூமி எதினால் நிறைந்திருக்கிறது?
5. கர்த்தர் யாருடைய ஆத்துமாவை மீட்டுக் கொள்ளுகிறார்?
6. என் நாவு உமது...................., நாள் முழுதும் உமது.................. சொல்லிக் கொண்டிருக்கும்.
7. வெளிச்சத்தைப் போலவும், பட்டப்பகலைப் போலவும் விளங்குவது எது?
8. நீதிமான்களுடைய இரட்சிப்பு யாரால் வரும்?
9. பாரச்சுமையைப் போல பாரமானது எது?
10. எந்த மனுஷனும் மாயையே என்பது..................?
11. மனுஷன் எப்படி திரிகிறான்?
12. எண்ணிக்கைக்கு மேலானவைகள் எவை?
13. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக என்று எப்பொழுதும் யார் சொல்லுவார்கள்?
14. எந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்?
15. தேவரீரே எனக்கு அரண் எங்கே வாசிக்கின்றோம்?

கடந்த ஆகஸ்ட் மாதம் கேள்விகளுக்கு பதிலளித்த அனைவருக்கும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துகொள்கிறோம்.

1. Mrs.Stella Jeshwanth
2. Mrs.Baby Jesudass
3. Mrs.Thangamani Anbalagan
4. Mrs.Rubavathi
5. Mrs.Ruby Jeyaseelan
6. Mrs.Syilya Sekar
7. Mrs.Benisha Christabel
8. Mrs.Selin Stephen

**Children's Corner Colouring**

1. S.Shaun Oliver
2. Sanhedrin

# The Promised Helper Comes

## Key Theme

Come Holy Spirit,
Renew Us

## Key Passages

Acts 2:1-13
Titus 3:5-8

## READ the Word

**The Holy Spirit Comes (Acts 2:1-13)**

Jesus had promised His friends that He would send a special Helper, the Holy Spirit. One morning, a sound like a strong wind blowing filled the house where Jesus' friends were staying. Something that looked like a small fire sat on top of each person's head! The Holy Spirit Jesus promised had finally come! **Find out more in Acts 2:1-13.**

**Answer the following questions:**

1. Who promised that the Holy Spirit would come to the believers after He left?

2. What did the disciples see and hear when the Holy Spirit came?

3. God saved us through the washing of rebirth and _______________ by the Holy Spirit. (Titus 3:5)




ANSWERS: 1) Jesus. 2) Saw fire and heard wind. 3) renewal.

Don't forget to send your answers to Pastor Uncle by the 15th of this month. +971 50 703 2150

## Colour This!

Grab your art supplies and colour this picture of Jesus' friends receiving the Holy Spirit.



## Learn the Word!

He ___________ us

through the ___________

of ___________ and


___________ by the Holy

___________.

(Titus 3:5b NIV)

## Who Is the Helper?

Write the letters on the lines below as you come to them in the spiral.




The Helper is the

_ _ _ _

_ _ _ _ _ _.

# Birthday & Wedding day Celebrants

**1st Sep**
MISS. JERSA RAIYAR
MR. PAUL RAJ RAJA K.
**2nd Sep**
MR. SAM RAJ JUDSON
**3rd Sep**
MR. GODGIL ROBINSON
MISS. ANGELA RHEA
MISS. CLAIRE JUDITH
**4th Sep**
MASTER. EDRICK RAJ
**5th Sep**
MASTER. MELVIN HRIDAY NATHANIEL
MRS. J.N.BASIL SHALLU
**7th Sep**
MASTER. JABEZ VAS C.
MISS. DORITA PEARLYN DANIEL
**8th Sep**
MASTER. NANDHU PRASAD
MR. PRAVEEN JEBAKAR
**9th Sep**
MASTER. RALPH SAMUEL GNANAKKAN
MASTER. PRAVIN
MISS. JESSICA
**10th Sep**
MR. PRAJEETH EMANUEL VETHANAYAGAM
MISS. DAFINA JEZIAH
**12th Sep**
MASTER. JEREMIAH RASU
MRS. FELISHA JANE
MRS. SHINY SELVARANI WESLEY
MASTER. J.A.ADRIAN SAMUEL
**13th Sep**
MRS. PRIYA DARSINI LIGHTEN
MISS. JENSA
**14th Sep**
MR. DAVID ARUN D.
MASTER. ACHASH JESHUA
**15th Sep**
MR. STEPHEN PACKIARAJ
**16th Sep**
MR. PETER VETHANAYAGAM
MASTER. TITUS ISAIAH ABRAHAM
MASTER. FELIX G.
MASTER. JOHAN SOLOMON
**17th Sep**
MISS. JESLIN GETHSI
MRS. NANCY PRIYADHARSHINI
MR. ANTONY LAMBERT DINAKARAN
MR. SAMUEL FRANKLIN
**18th Sep**
MR. CHRISTOPHER BENJAMIN BOSWELL E.
MASTER. JERSEN SAMUELRAJ
MRS. ESTHER JOYCE
MRS. PRINCY BEULAH
MISS. ANDREA ELIZABETH
**19th Sep**
MR. ROBERT PONSINGH T.
**20th Sep**
MR. STANLEY C.J. DANIEL
MR. EBANAZER.V
MASTER. KEVIN JOHN
MR. J.JOHN BRIGHT SINGH
**21st Sep**
MR. PRINCE RAJKUMAR D. Y.
MASTER. JELBERT
**26th Sep**
MR. MOHANDAS SATHIYARAJ
MRS. SUNI SMILA J.
**27th Sep**
MR. JEBASINGH.P
**28th Sep**
MRS. RITA JABA VASITAI
MRS. SHALINI
**29th Sep**
MR. SOLOMON DANIEL
**30th Sep**
MISS. SHANTHINI THANIGESH T.

## Wedding Anniversary

**1rd Sep**

MR. JEYAKUMAR SOLOMON S. & MRS. SHEEBA JEYAKUMAR

**3rd Sep**

MR. SURESH BABU P. & MRS. SUMATHI

**7th Sep**

MR. ROBERT PONSINGH T. & MRS. BABITHA ROBERT

**14th Sep**

MR. DANIEL NARGUNAM & MRS. RAMYA S.

**15rd Sep**

MR. JEBASINGH & MRS. JEMI POORANI

MR. RAJESH MANIRAJ & MRS. JEBA SABTHIKA

**16rd Sep**

MR. ALEX VIVIN ARUMAINAYAGAM & MRS. P.HEPHZIBAH CHRISTABEL

**17rd Sep**

MR. JEFFERY & MRS. ARCHANA

**19rd Sep**

MR. STEVEN SARAVANAN

MR. RICHARD SATHISH KUMAR & MRS. JUDITH BLESSY BERNICA

**25rd Sep**

MR. ASHOK KUMAR.D & MRS. ESTHER KALA.A

MR. JEBASINGH.P & MRS. MARYJAH BEAULH. D

# DAILY BIBLE READING SEPTEMBER 2024

| Day | Morning | Evening |
|---|---|---|
| 01 SUN | சங்கீதம்/PSALMS 117,118 | சங்கீதம்/PSALMS 119 :1-16 |
| 02 MON | வெளி /REVELATION 21:1-27 | வெளி /REVELATION 22:1-21 |
| 03 TUE | ஆதியாகமம் /GENESIS 1:1-31 | ஆதியாகமம் /GENESIS 2:1-25 |
| 04 WED | ஆதியாகமம் /GENESIS 3:1-24 | ஆதியாகமம் /GENESIS 4:1-26 |
| 05 THUR | ஆதியாகமம் /GENESIS 5:1-32 | ஆதியாகமம் /GENESIS 6:1-22 |
| 06 FRI | ஆதியாகமம் /GENESIS 7:1-24 | ஆதியாகமம் /GENESIS 8:1-22 |
| 07 SAT | ஆதியாகமம் /GENESIS 9:1-29 | ஆதியாகமம் /GENESIS 10:1-32 |
| 08 SUN | சங்கீதம்/PSALMS 119:17-32 | சங்கீதம்/PSALMS 119:33-48 |
| 09 MON | ஆதியாகமம் /GENESIS 11:1-32 | ஆதியாகமம் /GENESIS 12:1-20 |
| 10 TUE | ஆதியாகமம் /GENESIS 13:1-18 | ஆதியாகமம் /GENESIS 14:1-24 |
| 11 WED | ஆதியாகமம் /GENESIS 15:1-21 | ஆதியாகமம் /GENESIS 16:1-16 |
| 12 THUR | ஆதியாகமம் /GENESIS 17:1-27 | ஆதியாகமம் /GENESIS 18:1-33 |
| 13 FRI | ஆதியாகமம் /GENESIS 19:1-38 | ஆதியாகமம் /GENESIS 20:1-18 |
| 14 SAT | ஆதியாகமம் /GENESIS 21:1-34 | ஆதியாகமம் /GENESIS 22-24 |
| 15 SUN | சங்கீதம்/PSALMS 119:49-64 | சங்கீதம்/PSALMS 119:65-80 |
| 16 MON | ஆதியாகமம் /GENESIS 23:1-20 | ஆதியாகமம் /GENESIS 24:1-49 |
| 17 TUE | ஆதியாகமம் /GENESIS 24:50-67 | ஆதியாகமம் /GENESIS 25:1-34 |
| 18 WED | ஆதியாகமம் /GENESIS 26:1-34 | ஆதியாகமம் /GENESIS 27:1-46 |
| 19 THUR | ஆதியாகமம் /GENESIS 28:1-22 | ஆதியாகமம் /GENESIS 29:1-35 |
| 20 FRI | ஆதியாகமம் /GENESIS 30:1-43 | ஆதியாகமம் /GENESIS 31:1-55 |
| 21 SAT | ஆதியாகமம் /GENESIS 32:1-32 | ஆதியாகமம் / GENESIS 33:1-20 |
| 22 SUN | சங்கீதம்/PSALMS 119:81-96 | சங்கீதம் / PSALMS 119:97-112 |
| 23 MON | ஆதியாகமம் /GENESIS 34:1-31 | ஆதியாகமம் /GENESIS 35:1-29 |
| 24 TUE | ஆதியாகமம் /GENESIS 36:1-43 | ஆதியாகமம் /GENESIS 37:1-36 |
| 25 WED | ஆதியாகமம் /GENESIS 38:1-30 | ஆதியாகமம் /GENESIS 39:1-23 |
| 26 THUR | ஆதியாகமம் /GENESIS 40:1-23 | ஆதியாகமம் /GENESIS 41:1-36 |
| 27 FRI | ஆதியாகமம் /GENESIS 41:37-57 | ஆதியாகமம் /GENESIS 42:1-38 |
| 28 SAT | ஆதியாகமம் /GENESIS 43:1-34 | ஆதியாகமம் /GENESIS 44:1-34 |
| 29 SUN | சங்கீதம்/PSALMS 119:113-128 | சங்கீதம் /PSALMS 119:129-176 |
| 30 MON | ஆதியாகமம் /GENESIS 45:1-28 | ஆதியாகமம் /GENESIS 46:1-34 |

# ஆராதனை தியானப் பொருள்

## செப்டம்பர் - 2024

| நாள் | திருமறைபாடம் | | தியானப்பொருள் |
|---|---|---|---|
| ஞாயிறு<br>Sep-1<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | நீதிமொழிகள் 4:1-19<br>அப்போஸ்தலர் 22:1-5<br>லூக்கா 4:31-44<br>சங்கீதம் 111 | இயேசுவே குரு<br>JESUS THE GURU |
| ஞாயிறு<br>Sep-8<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | யாத்திரயாகமம் 1:15-22<br>ரோமர் 16:1-16<br>லூக்கா 8:1-3<br>சங்கீதம் 148 | கடவுளின் விடுதலைப் பணியில் பெண் பங்காளர்கள்<br>WOMEN PARTNERS IN GOD'S LIBERATIVE ACT |
| ஞாயிறு<br>Sep-15<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | சகரியா :8:12-19<br>ரோமர் 5:1-5<br>யோவான் 16:16-33<br>சங்கீதம் 119:161-176 | எனது அமைதியை உங்களுக்கு வழங்குகிறேன்<br>MY PEACE I GIVE TO YOU |
| ஞாயிறு<br>Sep-22<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | ஆமோஸ் 8:4-7<br>யாக்கோபு 2:1-7<br>லூக்கா 16:19-31<br>சங்கீதம் 145 | வறுமைக்கு கிறிஸ்தவ மறுமொழி<br>CHRISTIAN RESPONSE TO POVERTY |
| ஞாயிறு<br>Sep-29<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | யோசுவா 23:1-6<br>1 தீமோத்தேயு 5:1-10<br>லூக்கா 2:25-35<br>சங்கீதம் 120 | முதியோரின் ஞானம்<br>WISDOM OF THE ELDERLY |